https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

10th SEPTEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 44



02

**திரைப்படம் தயாரிக்கும் சந்திரிக்கா**



## லன்ஸாவின் கூட்டமைப்பை

# உடைப்பதற்கு பசில் ப்ளான்

மொட்டு கட்சியை உடைத்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் 02

## இராஜாங்க அமைச்சர்கள் செயலாளர்கள் மோதல்

இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்கிடையில் தொழில்ரீதியான மோதல்கள் தொடங்கியுள்ளன.

அண்மையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர்கள் தங்களால் செயலாளர்களோடு இணைந்து வேலை செய்ய முடியவில்லை என்று கூறினர்.

38 இராஜாங்க அமைச்சர்களுள் 35 இராஜாங்க அமைச்சர்கள் இந்தக் 02



## தயாசிரிக்கு சஜித் தரப்பு வலை

சிறிலங்கா சுதந்திர கட்சின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள தயாசிறி ஜயசேகரவுக்கு சஜித் தரப்பு வலை வீசத் தொடங்கியுள்ளது என்று 02




## சணல்-4 விற்கு எதிராக நடவடிக்கை

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தன்னைத் தொடர்புபடுத்தி சணல்-4 தொலைக்காட்சி ஆவணம் வெளியிட்டமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு புலனாய்வு பிரதானி சுரேஷ் சாலே பிரித்தானியாவின் இலத்திரனியல் ஊடக ஒழுங்குபடுத்தல் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது முறைப்பாட்டை அக்குழு ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அசாத் மௌலானாவின் சாட்சியத்தை அடிப்படையாக வைத்து சணல் -4 ஒளிபரப்பிய ஆவணத்தில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் அவர்கள் கூறுகின்ற காலப்பகுதியில் தான் இலங்கையில் இருக்கவில்லை என்றும் சுரேஷ் அந்த முறைப்பாட்டில் கூறியுள்ளார்.



புது சுடர்
www.puthusudar.lk
2023 SEPTEMBER 10 - SUNDAY

# சர்வதேச விசாரணையே வேண்டும்

இந்த வாரம் இலங்கையின் அரசியல் அரங்கை உலுக்கிக்கொண்டிருப்பது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக

பிரித்தானியாவின் சணல் -4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய ஆவணம்தாம்.

பிள்ளையானின் சகாவான அசாத் மௌலானாவின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அந்த ஆவணத்தின்படி அத்தாக்குதலின் சூத்திரதாரிகள் பிள்ளையானும் புலனாய்வு பிரதானி சுரேஷ் சாலேயும் ஆவர்.

கோத்தபே ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்பதுதான் அந்த ஆவணத்தின் கருத்து.

சம்பந்தப்பட்ட எல்லோரும் இதை மறுத்துள்ளனர்.பாதுகாப்பு அமைச்சும் மறுத்துள்ளது.அரசு இதற்கு பதில் வழங்கப்போவதில்லை என்று கூறியுள்ளது.

இருந்தாலும்,இது பலரை ஆட்டங்காணச் செய்துள்ளது என்பதை மறுக்க முடியாது.இதை எவர் மறுத்தாலும்,மக்கள் இது தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோதே பேசப்பட்டது அப்போது எதிர்க்கட்சியாக இருந்த மொட்டு தரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்காகவே இதைச் செய்தது என்று.

அதேபோல் மொட்டு ஆட்சியைப் பிடித்து கோத்தா ஜனாதிபதியானார். ஜனாதிபதியானதும் ஈஸ்டர் தாக்குதல்

தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டது.விசாரணை அதிகாரிகள் இடமாற்றப்பட்டார்கள்.இது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு கோத்தாவை பதவியில் இருந்து விரட்டுவதற்காக மக்கள் வீதிக்கு இறங்கியபோது அந்த மக்கள் வெளிப்படையாகக் கூறினார்கள் ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது கோத்தா தரப்புதான்.என்று.நாங்கள் ஏமாந்துபோய்-அப்பாவி முஸ்லிம்களை பகைத்துக்கொண்டு கோத்தாவுக்கு வாக்களித்துவிட்டோம் என்றார்கள்.

கோத்தா விரட்டப்பட்டபோது சொன்னார்கள் ""அப்பாவி மக்களை குண்டு வைத்து கொலை செய்த அந்த பாவம்தான் கோத்தாவை இப்படி விரட்டியுள்ளது என்று.

மொத்தத்தில் இந்தத் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்று மக்கள் என்றோ அறிந்துவிட்டார்கள்.அதனால் சணல்-4வின் ஆவணம் மக்களுக்கு பெரிதாக அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை.

அதைப் பார்த்த எல்லோரும் கூறியது "" இது எங்களுக்குத் தெரியும்தானே "" என்றுதான்.ஆக,அந்த ஆவணம் மக்களின் நிலைப்பாட்டை பலப்படுத்துவதற்கு -அவர்களின் நிலைப்பாடு சரி என்று கூறுவதற்கு உதவியாக இருந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

மேலும், முஸ்லிம்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை.இது அரசியலுக்காக செய்யப்பட ஒன்று என்று இந்த ஆவணம் மூலம் மக்கள் மேலும் புரிந்துகொண்டுள்ளனர்.

இதனால் இப்போது மக்களின் கவனம் முஸ்லிம் மக்களின் தரப்பில் இருந்து கோத்தா தரப்பிற்கு மாறிவிட்டது.இந்தத் தாக்குதலில் இனவேறுபாடுகள் இன்று மூவினத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்புபட்டுள்ளனர்.

அவர்கள் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இதைச் செய்யவில்லைஅவர்களின் அரசியல் தேவைக்காக இதைச் செய்துள்ளனர் என்று மக்களுக்கு விளங்கிவிட்டது.

இப்போது இருக்கின்ற அடுத்த பிரச்சினை இந்த ஆவணம் உண்மைதானா,இதில் அசாத் மௌலானா கூறுவது உண்மைதானா என்று கண்டறிவதுதான்.

அதற்கு உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.உள்நாட்டு விசாரணைமூலம் ஒருபோதும் உண்மையைக் கண்டறிய முடியாது.ஏற்கனவே நடத்தப்பட்ட விசாரணைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. விசாரணைகளில் தெரிவிக்கப்பட்ட சில தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில்,மீண்டும் உள்நாட்டு விசாரணை நடத்தினால் உண்மை வெளிவரவேமாட்டாது.ஆகவே எல்லோரும் இப்போது கோருவது சர்வதேச விசாரணையைத்தான்.அதுதான் சரியான வழி.

## இராஜாங்க...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஜனாதிபதியின் அமைச்சில் இராஜாங்க அமைச்சர்களாக உள்ள 3 இராஜாங்க அமைச்சர்களைத் தவிர ஏனைய 35 இராஜாங்க அமைச்சர்களும் அமைச்சின் செயலாளர்களுடனும் அமைச்சர்களுடனும் முரண்பட்டுக்கொண்டு இருப்பதை அவதனிக்கூடியதாக உள்ளது.

இராஜாங்க அமைச்சர்களுக்கும் அவர்களின் கெபினட் அமைச்சர்களுக்கும் இடையில் ஆரம்பமான மோதல்களின் தொடர்ச்யாகவே செயலாளர்களுடனான மோதல்கள் தொடங்கியுள்ளன.

தமது செயற்பாடுகளுக்கு செயலாளர்கள் முட்டுக்கட்டை போடுவதாலேயே இந்த மோதல்கள் தொடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தயசிறிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

சஜித் வட்டாரத்தில் இருந்து அறிய முடிகிறது.

தயாசிறி சு.கவில் இணைவதற்கு முன் இருந்தது ஐக்கிய தேசிய கட்சியில். அதற்குள் தலைமைத்துவப் பிரச்சினை தொடங்கியபோது சஜித்துக்கு ஆதரவாக நின்று போராடியவர்.

ரணிலை ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ பதவியில் இருந்து நீக்கி சஜித்தை தலைவராக்குவதற்காக தயாசிறி கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இறுதியில் அந்த முயற்சி தோல்வியடைந்ததால் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகி மஹிந்தவுடன் இணைந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து சுதந்திர கட்சியின் செயலாளரானார்.இப்போது அவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால் அவரைத் தம் பக்கம் வளைத்துப் போடுவதற்கு சஜித் தரப்பு இப்போது முயற்சிகளை எடுப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## லன்ஸாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதியாக்கும் நோக்கில் நிமால் லான்சாவால் உருவாக்கப்பட்டு வரும் அரசியல் கூட்டமைப்பை உடைப்பதற்கான வியூகத்தை மொட்டின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச வகுத்து வருகிறார் என்று அறிய முடிகிறது.

மொட்டு கட்சியில் இருந்து ஏற்கனவே பிரிந்து சென்ற அனுரபிரியதர்சன யாப்பா தரப்பும் அரசுடன் இணைந்துள்ள சிறிலங்கா சுதந்திர கட்சியின் 9 பேரும் இந்தக் கூட்டமைப்பில் இணையவுள்ளனர்.

மேலும் மொட்டு கட்சியில் இப்போது இருக்கின்ற சுமார் 40 எம்பிக்களை பிரித்து எடுத்து இந்தக் கூட்டமைப்பில் இணைப்பதற்கான முயற்சியில் லன்சா ஈடுபட்டுள்ளார்.

இந்தக் கூட்டமைப்பைக் கலைத்துவிடுமாறு பசில் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து கோரி இருந்தார். அதற்கு ஜனாதிபதி எந்த பதிலையும் வழங்கவில்லை.

இந்த நிலையில்,இந்தக் கூட்டமைப்பை உடைத்தெறிவதற்கான முயற்சியில் பசில் இறங்கியுள்ளார் என்று அவரது வட்டாரம் தெரிவிக்கிறது.

# உலக நீர்வளப் பாதுகாப்பு அமைப்பை நிறுவிய சவூதி அரேபியா

– காலித் ரிஸ்வான் –

உலகளாவிய நீர் வளத்தை பாதுகாப்பதற்கான ஒரு அமைப்பை சவூதி அரேபியா நிறுவுவதாக அந்நாட்டு பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அறிவித்துள்ளார்.

உலகின் நீர் விநியோகச் சிக்கல்களைச் சீர்செய்யும் தூ ர நோக்கோடு இவ்வமைப்பு நிறுவப்பட்டுள்ளதோடு சுற்றுச்சூழல் மற்றும் வளங்களை பாதுகாத்தல் தொடர்பான சவூதி அரேபியாவின் கரிசனைக்கான ஒரு எடுத்துக்காட்டாக இத்திட்டம் அமைகிறது.

உலகளாவிய நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கான பிற நாட்டு அரசாங்கங்கள் மற்றும் அமைப்புகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்து அவற்றை மேம்படுத்தி அவற்றோடு சேர்ந்து பயணிப்பதற்கு இவ்வமைப்பு முயற்சிக்கிறது.

அத்தோடு இந்நிறுவனம், பிற நாடுகள் மற்றும் நிறுவனங்களோடு இணைந்து நீர் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப அமைப்புகளை மேம்படுத்தவும், புது கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்கிறது.

மேலும் நீர்வளப் பாதுகாப்பு மற்றும் விநியோகம் தொடர்பான உயர் திட்டங்களை உருவாக்குவதற்கும் நிதியளிப்பதற்கும், உலக நீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்யவும் அனைத்து மக்களுக்கும் நீரை பெற்றுக்கொள்வதற்கான வசதியை ஏற்படுத்துவதிலும் இந்நிறுவனம் அக்கறை செலுத்துகிறது.

சவூதி அரேபியா ஆக்கபூர்வமான சுதேச முறைமைகளைப் பயன்படுத்தி பல ஆண்டுகளாக நீர் சுத்திகரிப்பு, பாதுகாப்பு மற்றும் விநியோகத்தில் அடைந்த கணிசமான முன்னேற்றங்கள் உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளன. நான்கு கண்டங்களில் உள்ள பல்வேறு நீர் பதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு திட்டங்களுக்காக 6 பில்லியனுக்கும் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நிதி சவூதி அரசாங்கத்தால்



ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பு, தங்கள் தேசிய நிகழ்ச்சி நிரல்களில் நீர்வள பாதுகாப்பு தொடர்பான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நாடுகளுடனும், தண்ணீர் தொடர்பான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நாடுகளுடனும் இணைந்து பணியாற்றவிருக்கிறது.

2050 ஆம் ஆண்டளவில் உலகின் தண்ணீர் தேவை இரட்டிப்பாகும் மற்றும் உலக சனத்தொகை 9.8 பில்லியன் வரை அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்ட நிலையில், சவூதியின் இத்தகைய ஒத்துழைப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தியில் சர்வதேச லயன்ஸ் கழகம் பங்களிப்பு





(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது இயங்கி வரும் கண் சிகிச்சை பிரிவை சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மேலும் விஸ்தரிப்பது சம்பந்தமான கலந்துரையாடல்

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான அன்பளிப்புகளை வழங்குதல் மற்றும் மர நடுகை நிகழ்வு (09) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழகத்தின் சர்வதேச பணிப்பாளர் மகேஷ் பாஸ்கால், மாவட்ட ஆளுநர் இஸ்மத் ஹமிட், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா, சம்மாந்துறை லயன்ஸ் கழக தலைவர் றாபி, பிராந்திய லயன்ஸ் தலைவர் எம்.டி.எம். அனாப், திட்டமிடல் மருத்துவர் நியாஸ் அஹமட், ஆளுநர் செயலாளர் சிறிபால, பொருளாளர் தம்மிக ஏனைய லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள்

மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.










# சட்டை இல்லாமல் சென்ற எம்பி



இது மே-9 ஆம் திகதி அலரிமாளிகைக்குள் நடந்த சம்பவங்களுள் ஒன்று.

அன்றைய தினம் அந்த மாளிகைக்குள் சிக்கி இருந்த எம்பிக்கள்-மக்கள் எல்லோரும் வெளியேறியது மறுநாளே.

எம்பிக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கண்களில் பட்டால் தாக்கப்படுவார்கள்.ஓர் எம்பி கொல்லப்பட்டுவிட்டார்.

அதனால் கடும் கவனமாகத்தான் எம்பிக்கள் வெளியேறினார்கள்.

அவ்வாறு வெளியேறியவர்களுள் கயாசான் நவநந்த எம்பியும் ஒருவர்.

அவர் எப்படி வெளியேறினார் தெரியுமா...?

அவர் அணிந்திருந்த சட்டையை கழற்றி தோளில் போட்டுக்கொண்டு-வாயில் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு நடையில் வெளியேறினார்.

அப்போது அங்கு தென்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை பார்த்து "" என்ன தம்பி கிழட்டு மைனாவை- அதாவது,மஹிந்த ராஜபக்ஸவை பிடிக்க முடியாமல் போய்விட்டது என என்று கூறிக்கொண்டு சென்றார்.சாதாரண மனிதன்போல்.

""ஓம் அண்ணா"" என்று பதிலளித்தார்கள் அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள்.

தெரிந்திருந்தால் அவ்வளவுதான்.

# திரைப்படம் தயாரிக்கும் சந்திரிக்கா



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கும் திட்டத்தில் உள்ளார்.

அந்தத் திரைப்படத்துக்குள் அவரது கணவரான விஜய குமாரதுங்கவின் வாழ்க்கையின் ஒரு பகுதியை உள்ளடக்குமாறு நடிகரும் அரசியல்வாதியுமான ரஞ்ஜன் ராமநாயக்க சந்திரிக்காவிடம் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

# கால் சட்டையை உயர்த்திய டலஸ்



சில நாட்களுக்கு முன் மாத்தறை கம்புறுபிட்டியவில் டலஸ் அழகப்பெரும தரப்பின் தொகுதிக் கூட்டம் ஒன்று இடம்பற்றது.

அப்போது உரையாற்றிக் கொண்டிருந்த டலஸ் அவ்வப்போது அவரது கால் சட்டையை உயர்த்தத் தொடங்கினார்.

அப்போது அவர் கூறினார்."" ரணில் மாதிரி நானும் இப்ப டவுசர உயத்தத் தொடங்கிடன் "" என்று.

அதற்கு அருகில் இருந்த டிலான் பெரேரா கூறினார் இது ஜனாதிபதியாவதற்கான அறிகுறி என்று.



## துப்பறிவாளன்

# சந்திரிகா-மலிக் ரகசிய சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நண்பரும் அரசியல் தரகருமான மலிக் சமரவிக்ரமவிற்கும் இடையில் சில நாட்களுக்கு முன் ரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு-07 இல் அமைந்துள்ள ஜப்பானிய உணவகம் ஒன்றிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரவு 8 மணியளவில் இரவு விருந்துடன் இச்சந்திப்பு இடம்பெற்றதாக அறிய முடிகிறது.

இதில் பேசப்பட்ட விடயம் என்னவென்று தெரியவில்லை.

# தடுமாற்றத்தில் அனுர



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்காக நிமல் லான்சா கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார் அல்லவா.

அதற்கு யாரைத் தலைவராகப் போடுவது என்பதில் இன்னும் ஒரு முடிவை எடுக்க முடியாமல் தடுமாறுகிறது அந்தத் தரப்பு.

அதற்கு அனுரபிரியதர்சன யாப்பாவை தலைவராக நியமித்து பொது செயலாளராக தான் ஆக வேண்டும் என்ற திட்டத்தில் லான்சா உள்ளார்.

இதற்கு அனுர ஆரம்பத்தில் இணங்கினார்.இப்போது சற்று பின்வாங்குகிறார். அதற்கு காரணம் இந்தக் கூட்டமைப்புக்கு மக்களின் செல்வாக்கு இல்லாமைதான்.

இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகிறாராம் அனுர.

# மங்களவுக்காக இறுதிவரை இருந்த அமைச்சர்



உயிரிழந்த மங்கள சமரவீரவின் நினைவு தினம் அண்மையில் கொழும்பு-07 இல் அமைந்துள்ள லக்ஸ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

பல அரசிலவாதிகள் அதில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார,சம்பிக்க ரணவக்க இருவரும் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் எனக் கூறி இடையில் சென்றுவிட்டனர்.

இவ்வாறு பல எம்பிக்கள் -அரசியல்வாதிகள் ஒவ்வொருத்தராக ஆள்மாறினர்.

ஆனால்,நிகழ்வு முடியும்வரை இருந்தவர் அமைச்சர் டிரான் அலஸ் மாத்திரம்தான்.

காரணம் அவர் மங்களவின் மிக நெருங்கிய நண்பன். மங்களவின் அரசியல் பயணத்தில் கூடவே இருந்தவர்.

அந்த நற்புக்காகவேதான் அன்று அவர் இறுதி வரை -நிகழ்வு முடியும் வரை இருந்தாராம்.

# ஏன் திருமணத்துக்குச் செல்லவில்லை?



இந்தியாவின் பிரபல தொழிலதிபர் பிரகாஷ் நாயரின் மகளின் திருமணம் கடந்த வாரம் கேரளா தலைநகர் கொச்சினில் இடம்பெற்றது.

இந்திய மற்றும் இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் அவர் இருநாட்டு அரசியல்வாதிகளுக்கும் அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார்.

இலங்கைக்கு வந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,மஹிந்த ராஜபக்ச,பசில்,கோத்தா உள்ளிட்ட பலருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.


அவர்களுக்காக அங்கு தங்குமிட வசதி உள்ளிட்ட பல வசதிகளை முன்கூட்டியே செய்து வைத்தார்.

கடந்த வாரம் திருமணம் இடம்பெற்றது.ஆனால், ரணில்,மஹிந்த, பசில், கோத்தா உள்ளிட்ட எவரும் கலந்துகொள்ளவில்லை.

இந்திய பிரதமர் மோடியும் கலந்துகொள்ளவில்லை.



– தொடர் – 01 –




# அஹதிய்யா

## அறநெறிப் பாடசாலைகளும் சட்டவிரோத கட்டணங்களும்

ஜ எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக ஞாயிறு தினங்களில் மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக இஸ்லாமிய சன்மார்க்க அறிவை வழங்கும் நோக்குடன் 1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அஹதிய்யா பாடசாலைகள் மாணவர்களிடமிருந்து சட்டவிரோதமாக கட்டணங்களை அறவிட ஆரம்பித்துள்ளதாகவும், அஹதிய்யா ஆசிரியர்களுக்கென அரசினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளை உரிய ஆசிரியர்களுக்கு வழங்காது நிதி மோசடியில் அஹதிய்யா பாடசாலை அதிபர்களில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக முஸ்லிம் கலாச்சார திணைக்களத்திடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக தகவல் அதிகாரி எம்.எஸ்.அலா அஹமத் பதில் அளிக்கையில்,

“அஹதிய்யா பாடசாலைகளில் மாணவர்களிடம் கட்டணம் அறவிடும் செயன்முறை முற்றிலும் தவறானதாகும்.அத்துடன் அஹதிய்யா ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அஹதிய்யா அதிபர்கள் சிலர் மேற்கொண்டுள்ள மேற்படி நிதி மோசடிகள் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன.

நிதி மோசடியில் ஈடுபட்ட அதிபர்களிடமிருந்து அப்பணம் மீளப் பெறப்பட்டு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் நேரடியாக அஹதிய்யா ஆசிரியரின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு அவர்களின் கொடுப்பனவுகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதன் மூலம் அஹதியாக்களில் இடம்பெறும் நிதி மோசடிகளைக் கட்டுப்படுத்த முடியும்”,என அவர் பதில் தருகிறார்.

தேசிய ரீதியில் அஹதிய்யா பாடசாலைகளை மேம்படுத்துவதற்கென அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனம் மற்றும் மாவட்ட அஹதிய்யா மத்திய சம்மேளனங்கள் உட்பட அஹதிய்யா பாடசாலை நிர்வாகங்கள் என பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புக்கள் உள்ள போதிலும் அஹதிய்யா பாடசாலைகளில் தொடரும் சட்டவிரோதமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இவைகள் போதுமானவைகள் அல்ல என்பதை அஹதிய்யா பாடசாலைகளில் இடம்பெறும் சட்ட விரோதமான நடவடிக்கைகள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

பின்வரும் நிகழ்வுகள் இவற்றிக்கு மிகச்சிறந்த உதாரணங்களாகும்.

நிவித்திகல பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான அன்வர் இப்ராஹீமின் மனைவி ஸைனப் ஆய்ஷா புற்று நோயாயால் பாதிக்கப்பட்டு மரணித்ததன் பின்னர் பாடசாலை செல்லும் வயதுடைய நான்கு பிள்ளைகளையும் தந்தை அன்வரே மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் பராமரித்து வருகிறார்.

மனைவி ஸைனபின் வழிகாட்டல்களின் கீழ் படிப்பதைத் தொடர்ந்த பிள்ளைகளை கல்வியின் ஊடாகவே கரைசேர்க்க வேண்டும் என்பது தந்தை இப்ராஹீமின் எதிர்பார்பாகும்.

இதற்காக அவர் விடுமுறை நாட்களில் கூட மேலதிகத் தொழில்களில் ஈடுபட்டு பிள்ளைகளின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருகிறார்.

நிவித்திகலை நகரில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் இல்லாத போதும் அங்குள்ள சிங்கள மொழிப் பாடசாலையில் சேர்த்து படிக்க வைக்கும் தனது பிள்ளைகளுக்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை இரத்தினபுரியில் நடத்தப்பட்டு வரும் அஹதிய்யா ஞாயிறு பாடசாலை மூலமே நிறைவு செய்ய அவர்கள் கடமைப்பட்டிருந்தார்கள்.

மறைந்த தாய் ஸைனபின் எதிர்பார்ப்பு பிள்ளைகளை நன்றாக படிக்க வைப்பதுடன் அவர்களுக்கு இஸ்லாமிய மார்க்கம் பற்றிய போதிய அறிவையும் வழங்க வேண்டும் என்பதாகும். இதை நன்கு உணர்ந்திருந்த அன்வர் தனது பிள்ளைகளுக்கு அடிக்கடி உணர்த்திக்கொண்டிருந்தார்.இதனால் பிள்ளைகளும் பாடசாலைக் கல்வியிலும் அஹதிய்யா மூலம் கற்றுத்தரப்புடும் சமயப் பாடங்களையும் மிகக் கவனமெடுத்து படிக்க ஆரம்பித்தார்கள்.

இவ்வருட இறுதியில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அன்வரின் மூத்த மகள் பஸ்மிலா அஹதிய்யாவில் கற்றுவந்த இஸ்லாமியக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு தனது சாதாரண தரப் பரீட்சைக்கும் இஸ்லாம் பாடத்தையே சமய பாடமாக தோற்ற வேண்டும் என எண்ணியிருந்தாள்.

முற்றிலும் இலவசமாக மாத்திரம் நடத்தப்பட்டு வந்த அஹதிய்யா பாடசாலையில் மாணவர்களிடமிருந்து மாதாந்தக் கட்டணம் அறவிட ஆரம்பித்ததால் வாரம் ஒன்றிற்கு பிள்ளைகள் நால்வரையும் அஹதிய்யாவிற்கு அனுப்ப தந்தை அன்வர் இப்ராஹீமுக்கு சுமார் இரண்டாயிரம் ரூபா அளவில் செலவாகிறது.

கட்டிட நிர்மாணக் கம்பெனி ஒன்றில் சாதாரண கூலித் தொழிலாளியாக வேலை பார்த்துக் கொண்டிருந்த தந்தை இப்ராஹீமுக்கு இதுபெரும் சுமையாகவும்,சிரமமாகவும் அமைநதிருந்ததை உணர்ந்த மகள் பஸ்மிலாவும் அவளின் சகோதரிகள் மூவரும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே அஹதிய்யா செல்வதை நிறுத்திக் கொண்டுள்ளனர்.

இஸ்லாம் பாடத்தை முறையாக படிக்காமல் பரீட்சைக்குத் தோற்றினால் அதில் சித்தியடையாமல் போகலாம் என்பதை உணர்ந்த பஸ்மிலா அவளுடன் படிக்கும் ஏனைய முஸ்லிம் பிள்ளைகளைப் போல் பௌத்த சமயத்தையே சாதாரண தரப் பரீட்சையில் சமய பாடமாக தெரிவு செய்துள்ளார்.

இது பற்றி தந்தை இப்ராஹீமிடம் கேட்ட போது “ தனது ஒவ்வொரு பிள்ளையும் தனது சமயப் பின்னணியுடனேயே வளர்க்கப்படுவதையே எந்தப் பெற்றோரும் விரும்புகின்றனர்.இது சமய உரிமையும் கூட.எனினும் எனது பிள்ளைகளுக்கு இஸ்லாமிய சமய அறிவைப் பெறுவதற்கு இன்று வாய்ப்புக்கள் இல்லை.

முற்றிலும் இலவச சேவையை வழங்க வேண்டுமென்று அன்று நிறுவப்பட்ட அஹதியாக்கள் இன்று கட்டணம் செலுத்திப் படிக்கும் வியாபார வகுப்புக்களாக மாறியுள்ளதால் எனது பிள்ளைகள் உட்பட நாடளாவிய ரீதியில் இஸ்லாம் கற்பிக்கப்படாத அரச தனியார் பாடசாலைகளில் கற்கும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு அநியாயம் நிகழ்கிறது”, என தன் மன வேதனையை விபரிக்கிறார் அவர்.

–தொடரும்–

# மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் SLIIT

SLIIT இன் ஆய்வு மற்றும் சர்வதேசத்துக்கான பிரதித் துணைவேந்தர் பேராசிரியர் சமந்த தெலிஜ்ஜகொட வின் நேர்காணல்:

**கேள்வி: லிவப்பூல் ஜோன் மூர்ஸ் பல்கலைக்கழகம், மன்செஸ்டர் மெட்ரோபொலிடன் பல்லைக்கழகம், டெக்கின் பல்கலைக்கழகம் மற்றும் குயின்ஸ்லான்ட் பல்கலைக்கழ் போன்றவற்றுடன் இணைந்து SLIIT வழங்கிவரும் சர்வதேச பட்டப் பாடநெறிகள் குறித்த விளக்கமொன்றை வழங்க முடியுமா?**

**பதில்:** எமது பாடநெறிகளை நாம் இரண்டு முறைகளில் வழங்குகின்றோம். முதலாவதாக, உலகளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் அவர்களின் பட்டங்களை தனித்துவமாக இலங்கையில் வழங்குவதற்கான உரிமையைப் பெற்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளோம்.

பிரித்தானியாவின் லிவப்பூல் ஜோன் மூர்ஸ் பல்கலைக்கழகம், மன்செஸ்டர் மெட்ரோபொலிடன் பல்லைக்கழகம், அவுஸ்திரேலியாவின் டேகின் பல்கலைக்கழகம் மற்றும் குயின்ஸ்லான்ட் பல்கலைக்கழகம் போன்றவற்றுடன் நாம் கொண்டுள்ள பலமான கூட்டாண்மையின் ஊடாக பரந்துபட்ட பட்டங்களை இலங்கையில் வழங்கக்கூடியதாகவுள்ளது.

சில பட்டங்கள் முதலாவது அல்லது இரண்டாவது வருடங்கள் பகுதியளவில் இங்கு கற்பிக்கப்படுவுதுடன், சில பட்டங்கள் முழுமையாக எமது கம்பஸ ிலேயே கற்பிக்கப்படுகிறன்றன. தாம் கற்கும் பட்டத்தின் ஒரு பகுதியை இலங்கையில் கற்பதற்கும் மிகுதியை சம்பந்தப்பட்ட நாட்டுக்குச் சென்று பூர்த்தி செய்வதற்குமான வாய்ப்புக்களையும் மாணவர்கள் கொண்டுள்ளனர்.

உதாரணமாக, அவுஸ்திரேலியாவின் பு8 பல்கலைக்கழகங்களில் ஒன்றான குயின்ஸ்லான்ட் பல்கலைக்கழகத்துடன் நாம் கொண்டிருக்கும் கூட்டாண்மையின் ஊடாக மாணவர்கள் அவுஸ்திரேலியா செல்வதற்கு முன்னர் இலங்கையில் தமது பட்டத்தின் ஒரு பகுதியை இங்கு பூர்த்திசெய்ய முடியும்.

அதேபோல, மன்செஸ்டர் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் ஆடைவடிவமைப்பு வணிக மற்றும் முகாமைத்துவப் பட்டப் பாடநெறிகளைத் தொடரும் மாணவர்கள் பிரித்தானியாவுக்குச் செல்லாமலே தகமையைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

லிவப்புல் ஜோன் மூர்ஸ் பல்கலைக்கழகத்தின் ஊடாக வழங்கப்படும் வணிக முகாமைத்துவம், கட்டடவடிவமைப்பு, கணிய அளவையியல், உளவியல், சட்டம், உள்ளக வடிவமைப்பு போன்ற பட்டங்களைக் கற்கும் மாணவர்கள் பிரித்தானியாவுக்குச் செல்ல முன்னர் அவற்றை இலங்கையில் முழுமையாகப் பூர்த்தி செய்யவும் முடியும்.

அவுஸ்திரேலியாவின் டேக்கின் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தாதியர் பட்டத்தைக் கற்கும் மாணவர்கள் டிப்ளோமா வரையிலான திட்டத்தை SLIIT இல் பூர்த்திசெய்ய முடியும் என்பதுடன், மிகுதியை அவுஸ்திரேலியாவில் பூர்த்தி செய்ய முடியும்.

இந்த நான்கு பல்கலைக்கழகங்களும் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றிருப்பதுடன், சர்வதேச ரீதியில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளன. சலுகைகளை மேம்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் எங்களின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, புகழ்பெற்ற தரவரிசைப் பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு நாம் முன்னுரிமை வழங்குகின்றோம்.

இதற்கு மேலதிகமாக, கணினி, பொறியியல், வணிகம் போன்ற துறைகளில் எமது மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதற்காக அனுப்புவதற்கு 25 புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் நாம் ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.



**கேள்வி: உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் தொழில்முறை முன்னேற்றம் மற்றும் தொழில்வாய்ப்பு போன்றவற்றுக்கு சர்வதேச பட்டங்கள் பங்களிக்கின்றனவா?**

**பதில்:** எமது உள்நாட்டு மாணவர்கள் இந்த பட்டப்படிப்புகளை முடித்த பின்னர் பரந்துபட்ட வேலைவாய்ப்புக்களுக்குச் செல்கின்றனர். 95வீதத்துக்கும் அதிகமான பட்டதாரிகளுக்கு பட்டப்படிப்பு முடிந்த 3 மாதங்களுக்குள் வேலை கிடைத்துவிடும்.

உலகளவில் தேவைப்படும் வெளிநாட்டு வேலைகளுக்கான தகுதிகள், உயர்மட்ட வேலை வாய்ப்புக்கள் இதன்மூலம் உருவாகின்றன.

மேலும், இந்தப் பட்டப் பாடநெறிகளில் அந்தந்த நாடுகளில் இரண்டு வருடப் படிப்பை முடிக்கும் மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**கேள்வி: சர்வதேச பட்டப் பாடநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு ளுடுஐஐவு இனால் வழங்கப்படும் ஒத்துழைப்பு மற்றும் வளங்கள் பற்றி விளக்கமளிக்க முடியமா?**

**பதில்:** நாம் அனைவருக்கும் சமமாகவும், அன்புடனும் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். சர்வதேச பட்டப் பாடநெறிகளில் மாணவர்களுக்கு நாங்கள் வழங்கும் ஆதரவு அவர்களுக்கு மிகவும் முக்கியமானது.

அந்த மாணவர்கள் உதவி துணைவேந்தர் அலுவலகத்தின் (ஆய்வு மற்றும் சர்வதேசம்) சர்வதேச பிரிவின் கீழ் அதிக ஆர்வத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பிரிவின் மூலம், விசாக்கள், தங்குமிடம், ஆலோசனை, உதவித்தொகை வாய்ப்புகள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனான தொடர்பு, ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் தொடர்புடைய தேவைகளுக்கான ஆதரவை நாங்கள் வழங்குகின்றோம்.

நவீன விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூட வசதிகள், முழுநேர பேராசிரியர்கள், பல்வேறு விளையாட்டுகள், செயற்பாடுகள் மற்றம் பல்வேறு வசதிகளைக் கொண்ட நவீன கற்றல் சூழல் என்பவற்றை எமது பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

**கேள்வி : பட்டப் பாடநெறிகள் மாணவர்களுக்கு வெளிநாட்டில் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றனவா?**

**பதில் :** ஏற்கனவே குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா உட்பட நான் முன்னர் குறிப்பிட்ட 25 க்கும் மேற்பட்ட உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் நாங்கள் ஒத்துழைக்கிறோம்.

அந்தப் பல்கலைக் கழகங்களில் சேரும் மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தடையின்றித் தொடர இடம் கொடுக்கப்படுகிறது. இலங்கையில் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் படித்த பின்னர், பல மாணவர்கள் எங்களுடன் ஒத்துழைக்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புகளை பரிமாறிக்கொள்ள அல்லது நேரடியாக சேருவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்துகின்றனர்.

சர்வதேச பட்டப் பாடநெறிகள் குறித்த மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள +94 11 754 4801 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தவும் அல்லது info@sliit.lk என்ற மின்னஞல் மூலம் தொடர்புகொள்ளவும்.

# மக்கள் வங்கியின் இலாபம் அதிகரிப்பு

2023 ஜீன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான பெறுபேறுகளை மக்கள் வங்கி இன்று அறிவித்துள்ளதுடன், மொத்த திரட்டிய தொழிற்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கு முன் இலாபம் ஆகியவற்றை முறையே ரூபா 48.2 பில்லியன் மற்றும் ரூபா 9.4 பில்லியன் ரூபா ஆக அறிவித்துள்ளது. (2022 முதல் அரையாண்டு: ரூபா 80.7 பில்லியன் மற்றும் ரூபா 15.2 பில்லியன்).

2022 ஆம் ஆண்டின் பெரும்பகுதியில் நிலவிய உயர்ந்த வட்டி வீதச் சூழலில் இருந்து எழுந்த அதிக வட்டிச் செலவுகள் காரணமாக, தவணை வைப்பு நிதிக்கான செலவுகள் அதிகரிக்க வழிவகுத்ததுடன், திரட்டிய தேறிய வட்டி வருமானம் 2022 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 ஜீன் 30 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் ரூபா 31.4 பில்லியன் தொகையாக சரிவடைந்தது.

திரட்டிய தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் ரூபா 7.9 பில்லியனாக இருந்தது, இது 2022 இன் முதல் அரையாண்டின் போது ஒரு முறை மட்டுமான விடயங்கள் நீங்கலாக, இதே ஒப்பீட்டு அடிப்படையில் 6.0மூ வளர்ச்சியைக் குறிக்கிறது.

பணவீக்கத்தை பிரதிபலிக்கும் வகையிலான செலவு அழுத்தங்கள், பெரும்பாலாக 2022 இன் பிற்பகுதியில் எழுந்த நிலையில், திரட்டிய மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள் 12.98மூ ஆல் அதிகரித்து ரூபா 30.2 பில்லியனை எட்டியது (2022 முதல் அரையாண்டு: ரூபா 26.7 பில்லியன்).





# மீண்டும் Cathay Pacific




| வாரத்திற்கான நாட்கள் | விமானம் | புறப்பாடு | STD | வருகை | STA |
|---|---|---|---|---|---|
| புதன்கிழமை<br>வெள்ளிக்கிழமை<br>ஞாயிற்றுக்கிழமை | CX610 | கொழும்பு | 0045 | ஹாங்கொங் | 0840 |
| செவ்வாய்க்கிழமை<br>வியாழக்கிழமை<br>சனிக்கிழமை | CX611 | ஹாங்கொங் | 2005 | கொழும்பு | 2330 |

வர்த்தக சுடர்

ஹாங்கொங்கைத் தளமாகக் கொண்ட விருதுபெற்ற விமான சேவையான ஊயவாயலியஉகைளை, 2024 பெப்ரவரி 2ஆம் திகதி முதல் இலங்கைக்கான விமான சேவையை மீள ஆரம்பிக்கவுள்ளது.நான்கு வருட இடைவெளியின் பின்னர் இலங்கையின் வான் பரப்பில் மீண்டும் உயரப் பறக்கவுள்ளது.

யு330 எயார்பஸ் விமானங்களின் மூலம் வாரத்துக்கு மூன்று விமான சேவைகளை ஊயவாயலியஉகைளை செயற்படுத்தவுள்ளது.இந்த விமானமானது இரண்டு வகுப்புக்களில் அதாவது சிக்கன வகுப்பில் 265 ஆசனங்கள் மற்றும் வணிக வகுப்பில் 28 ஆசனங்கள் உள்ளடங்கலாக 293 ஆசனைங்களைக் கொண்டுள்ளது.

இந்த விமான சேவை மீளவும் ஆரம்பிக்கப்படுவதானது ஹாங்கொங்கிற்கும் இலங்கைக்கும் விமானத்துறை தொடர்பில் நீண்டகாலமாகக் காணப்பட்ட பங்குடமைக்கு உயிர்ப்பூட்டும் வகையில் அமையும்.

## பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான ஆதரவு விஸ்தரிப்பு



யூனியன் வங்கி பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான ஆதரவை விஸ்தரித்துள்ளது. பெண் தலைமைத்துவ வியாபாரங்கள் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்களை கட்டியெழுப்புவதில் தனது சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றது. 25 வருடங்களுக்கு மேலாக, நாட்டின் சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கு ஆதரவளித்து வருகிறது.

இந்தத் துறைக்கான நிதித் தீர்வுகளை வழங்குவதற்கு மேலதிகமாக, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை கடன் வசதியினூடாக, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு மானியங்களைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்துகின்றது.

இந்த கடன் வசதியினூடாக, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு 10மூ மேலதிக கடன் பெறுமதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன், தெரிவு செய்யப்பட்ட துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு 25மூ மேலதிக கடன் பெறுமதிகள் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

யூனியன் வங்கியின் அபிவிருத்தி நிதியளிப்பு மற்றும் வியாபார மீட்சிஃ மறுசீரமைப்பு பிரதம முகாமையாளர் ஜனக எதிரிசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “ யூனியன் வங்கி பெண் தொழில்முயற்சியாண்மைகளுக்கு நிதியளிப்பு, ஆலோசனை சேவைகள் மற்றும் திறன் விருத்தி போன்றன அடங்கலாக பல்வேறு ஆதரவுகளை வங்கி வழங்கியுள்ளது.

சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட பயிற்சிப்பட்டறைகளில் பங்கேற்றிருந்தவர்களில் 60மூக்கு அதிகமானவர்கள் பெண் தொழில்முயற்சியாளர்களாக இருந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

மானியங்களுக்கு மேலதிகமாக, பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு தமது அறிவை மேம்படுத்தவும் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கும் மற்றும் வியாபார நிலைபேறாண்மை தொடர்பில் அறிந்து கொள்வதற்கும் வங்கியினால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. என்றார்.



## பொலிஎதிலீன் குழாய் உற்பத்தி தொழிற்சாலை திறப்பு

புத்தாக்க தொழில்நுட்பத்திலான (Inotec) பொலிஎதிலீன் (PE) குழாய் உற்பத்தி தொழிற்சாலையை Hayleys Agriculture Holdings Limited திறந்து வைத்துள்ளது.

இதன் மூலம் விவசாய நீர்ப்பாசனத்தில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகியுள்ளது. டுனைெநட கைத்தொழில் வலயமான சபுகஸ்கந்தவிற்குள் அமைந்துள்ள இந்த தொழிற்சாலையானது, மேம்பட்ட நீர்ப்பாசன தீர்வுகளை வழங்குவதன் மூலம், இலங்கையின் விவசாய நடைமுறைகளில் புரட்சியை ஏற்படுத்தவுள்ளது.

இவ்விழாவின் பிரதம அதிதிகளாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, Hayleys PLC இன் தலைவரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டிதகே உள்ளிட்டோர் கலந்து கொண்டதோடு, விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் பணிப்பாளர் கலாநிதி றொஹான் விஜேகோன் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் இத்திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Hayleys Agriculture Holdings Limited மற்றும் புகழ்பெற்ற PE குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் உற்பத்தியாளரான தாய்லாந்தின் முயழெமசழனரஉவள ஆகியவற்றிற்கு இடையேயான ஒரு மிகப் பாரிய கூட்டாண்மையின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையிலான இந்த நிகழ்வானது, மேம்பட்ட நுண்-நீர்ப்பாசன தொழில்நுட்பத்தில் முயழெம இன் நிபுணத்துவத்தை உயலடநலள யுபசஉைரடவரசந இன் நோக்குடன் இணைந்து செயற்படுத்துகிறது.



## கொமர்ஷல் வங்கி-ஜோன் கீல்ஸ் இணைவு


ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ், கொமர்ஷல் வங்கி பிஎல்சியுடன் மூலோபாய பங்காண்மையினூடாக இணைந்து TRI-ZEN Apartmentsகளுக்கு ‘Freedom Mortgage’ திட்டத்தை மீள அறிமுகம் செய்துள்ளது.

இந்த வீட்டு நிதியளிப்பு தீர்வின் அங்கமாக, ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ் வாடிக்கையாளர்களுக்கு ஆரம்பத்தில் 20% தொகையை செலுத்தி, அடுத்த 6 மாதங்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளையும் மேற்கொள்ள வேண்டியதில்லை.

தொடர்மனை ஒன்றை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்போருக்கும், முதலீட்டாளர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட நிதிசார் நெகிழ்ச்சித்தன்மையை அனுபவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

Freedom Mortgage இனூடாக, சொத்துக்கள் உரிமையாண்மையுடன் தொடர்புபட்டுள்ள நிதிச் சவால்களை தணிக்க எதிர்பார்க்கப்படுவதுடன், கொள்வனவாளர்களுக்கு அடைமான மீளச் செலுத்தல்கள் தொடர்பில் உடனடிச் சுமையின்றி, தொடர்மனை ஒன்றின் உரிமையாளராகக்கூடியதாக இருக்கும்.

இந்த புத்தாக்கமான தீர்வினூடாக, ஜோன் கீல்ஸ் புரொப்பர்டீஸ் நிறுவனத்தின் வதிவிட ரியல் எஸ்டேட் பிரிவை மாற்றியமைப்பதற்கான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்படுவதுடன், பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களின் தேவைகளையும் கனவுகளை நிறைவேற்றவும் முன்னுரிமை வழங்கக்கூடியதாக உள்ளது.




# Code Blast நிகழ்வு

இலங்கையின் மென்பொருள் வடிவமைப்பாளர் சமூகத்தில் புத்தாக்கத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில்முயற்சியாண்மை திறனை தூண்டும் வகையில் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, hSenid மொபைல் சொலூஷன்ஸ் உடன் இணைந்து, "Code Blast" தேசிய உயஉமயவாழெ 2023 ஐ முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

பங்குபற்றுநர்களுக்கு mSpace – bespoke app வடிவமைப்பு கட்டமைப்பில் பங்கேற்று, தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்தவும், நிஜ உலக பிரச்சனைகளை தீர்ப்பதற்கான புத்தாக்கமான தீர்வுகளை அறிமுகம் செய்வதற்கும் உதவும் வகையில் அமைந்திருக்கும்.

mSpace 'Code Blast' தேசிய உயஉமயவாழெ நிகழ்வு, இலங்கையின் மென்பொருள் வடிவமைப்பாளர் கட்டமைப்பில் நிலைத்திருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 செப்டெம்பர் 30ஆம் திகதி, கொழும்பு 10, ட்ரேஸ் எக்ஸ்பேர்ட் சிட்டியில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில், முன்னணி நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் நடுவர்களாக பங்கேற்பர்.

mSpace Code Blast Hackathon இனூடாக பட்டதாரிகள், பட்டம் பயிலும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை, புத்தாகக்த்தினூடாக ஒன்றிணைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரே எண்ணங்களைக் கொண்டவர்களுடன் இணைந்து அணியாக இந்த போட்டியில் தமது ஆக்கங்களை நடுவர்களின் முன்பு சமர்ப்பிக்குமாறு அளியஉந அழைப்பு விடுத்துள்ளது. வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.

# களஞ்சிய தீர்வுகளை வழங்கும் Hayleys

முன்னணி தொழில்துறை தீர்வுகள் வழங்குநரான Hayleys Aventura (Hayleys Aventura) அதன் உலகளாவிய கூட்டாளர் வலைப்பின்னலுடன் முடிவுப் பொருட்கள், மூலப்பொருட்களைக் கையாளுதல் மற்றும் களஞ்சிய தீர்வுகளை வழங்குவதற்கான சேவைகளை மேலும் விரிவாக்கம் செய்வதாக அறிவித்துள்ளது.

இது இலங்கை நிறுவனங்களுக்கு ஒரே இடத்தில் இருந்து உயர்தர களஞ்சிய வசதிகளுக்கான தீர்வுகளை பெற உதவுகிறது.

சர்வதேச அளவில் புகழ்பெற்ற நிறுவனங்களான Hyster, Prestar, Goodpack மற்றும் A-Safe போன்றவற்றுடன் வலுவான உறவுகளைப் பயன்படுத்தி, Hayley's Aventura தற்போது பரந்த அளவிலான தொழில்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குகிறது.

"இலங்கை தனது ஏற்றுமதி வருமானத்தை வளர்த்துக்கொள்ள வேண்டிய நேரத்தில், இலங்கை உற்பத்தியாளர்களின் விநியோகச் சங்கிலிகளில் செயல்திறனை மேம்படுத்துவதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

மேலும் அவர்களின் தயாரிப்புகளை சந்தைக்குக் கொண்டுவருவதற்கான திறனை மேலும் வலுப்படுத்துகிறோம். முன்னணி உலகளாவிய பிராண்டுகளுடனான எங்கள் கூட்டாண்மைகளை மேம்படுத்துவதன் மூலம், உயர்தர முடிவுப் பொருட்கள், மூலப்பொருட்களைக் கையாளுதல் மற்றும் களஞ்சிய தீர்வுகளை மிக உயர்ந்த உலகளாவிய தரத்திற்கு மலிவு விலையில் வழங்க முடியும்." என Hayleys Aventura (Pvt) Ltd. இன் முகாமைத்துவப் பணிப்பாளர் வஸப ஜயசேகர தெரிவித்தார்.






# வெற்றிகரமாக முடிந்த COMPLAST-2023

முழுமையான பிளாஸ்டிக் பொருட்கள் கண்காட்சியின் (COMPLAST 2023) 7ஆவது பதிப்பானது, உற்பத்திகள் மூலமான ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் உறுதியான அர்ப்பணிப்புக்கு முக்கிய இடத்தை வழங்கியுள்ளது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்நிகழ்வு, 2023 ஓகஸ்ட் 25 முதல் 27 வரை, கொழும்பில் உள்ள பெருமைமிக்க பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனம் (PRISL), Smart Expos, Industrial Development Board ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பானது, இக்கண்காட்சியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு உச்ச பங்களிப்பை வழங்கியது.

இந்த ஒப்பிடமுடியாத கூட்டாண்மையானது, இலங்கையின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் அதன் ஊக்குவிப்பு தொடர்பான இந்த அமைப்புகளின் கூட்டு முயற்சிகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதோடு, அதன் உலகளாவிய உற்பத்தி பாதையை மேம்படுத்துகிறது.

"புத்தாக்கத்தை மெருகூட்டுதல், முன்னேற்றதிற்கு வலுவூட்டல்" எனும் தொனிப்பொருளின் கீழ், தொழில்துறை முன்னேற்றம் தொடர்பான நாட்டின் அசைக்க முடியாத கவனத்தை காட்டும் வகையில் இடம்பெற்ற இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வானது, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண தலைமையில் இடம்பெற்றது.

இந்த திறப்பு விழாவில் விசேட விருந்தினர்களாக, இலங்கைக்கான இந்திய துணை உயர் ஸ்தானிகர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே உள்ளிட்ட கௌரவ பிரமுகர்கள் மற்றும் அதிதிகள் கலந்து கொண்டதோடு, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். சர்வதேச ஒத்துழைப்புகளை வளர்ப்பதிலும் தொழில்துறை வளர்ச்சியை முன்னெடுப்பதிலும் இந்நிகழ்வு முக்கியத்துவம் வழங்கியுள்ளதை இது பிரதிபலிக்கிறது.

# ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல்: முதல் தெற்காசிய நாடாக இலங்கை

இலங்கையில் அதிகரித்து வரும் புற்றுநோயாளர்களின் போக்கானது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

கடந்த காலங்களை பார்க்கும் போது, இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 2005 இல் 13,372 ஆக இருந்து 2019 இல் 31,848 ஆக அதிகரித்துள்ளது. இது 138% எனும் குறிப்பிடும்படியான அதிகரிப்பைக் காட்டுகிறது.

உலகளாவிய ரீதியிலும் புற்றுநோய் பதிவுகள் இதே விகிதத்திலேயே உயர்ந்துள்ளன. புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதே புற்றுநோயை எதிர்த்து போராடுவதற்கான மிகவும் பயனுள்ள உத்திகளில் ஒன்றாகும் என, உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட

ஆரம்பநிலை கண்டறிதல் சிகிச்சை விளைவுகளுக்கு மிகவும் பயனுள்ள வழி வகுப்பதோடு, அதிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது. பல உள்ளக புற்றுநோய்களை கண்டறிவதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட, உடலுக்குள் எவ்வித கருவிகளையும் செலுத்த அவசியமற்ற, ஸ்கேனிங் மென்பொருளான Ophtascan இன் நம்பிக்கைக்குரிய புத்தாக்க கண்டுபிடிப்பானது ஒரு புதிய மைல்கல்லாகும்.

இவ்வாறான வகையில் உள்ளடங்கும் ஒரே மென்பொருளும், காலத்திற்கு அவசியமான வகையில், நேரடியாக பார்வையிடும் ஒரேயொரு ஸ்கேனிங் தீர்வுமான Ophtascan, புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக காணப்படுகிறது.



# வாகனப் பராமரிப்புக்கு இலகுக் கொடுப்பனவுத் திட்டங்கள்




செலான் அட்டைகள் இலங்கையின் பல்வேறு முன்னணி வாகனப் பராமரிப்பு சேவை வழங்குனர்களோடு பங்கான்மையை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் U&H Wheel Service, DSI Tyres, Crown Tyres Pvt Ltd, Universal Tyre, Prince Tyre Service, Ideal Motors (Pvt) Ltd, Indra Motor Spares மற்றும் Pink Auto Shopஆகியோர் உள்ளடங்குவதோடு, பிரத்தியேக 0% வட்டியுடனான இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை வாகனப் பராமரிப்பு சேவைகளுக்காக இவர்கள் வழங்கி, சௌகரியத்தையும் நிதி ரீதியான ஆறுதலையும் பெற்றுத் தருகின்றனர்.

கொள்வனவுகளை இலகு கொடுப்பனவுத் திட்டங்களாக மாற்றிக்கொள்ள, அட்டை உரிமையாளர்கள் கொடுப்பனவை மேற்கொண்டு 7 வேலை நாட்களுக்குள் துரித இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொள்ள வேண்டும்.

கொடுக்கல் வாங்கல்களுக்கு செலவிடும் ஒவ்வொரு 100 ரூபாவுக்கும் ஒரு புள்ளி வீதம் ஏனைய ஏனைய Signature மற்றும் World Mastercardஅட்டை உரிமையாளர்களும், ஒவ்வொரு 300 ரூபாவுக்கும் ஒரு புள்ளி வீதம் Seylan Visa Platinum அட்டை உரிமையாளர்களும் வெகுமதிப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வர்.

இப்புள்ளிகளைப் பல்வேறு விற்பனையாளர்களிடம் பயன்படுத்த முடிவதோடு, செலான் அட்டைகளின் பெறுமதியை இவை மேலும் மேம்படுத்துகின்றன.

இந்த சலுகைகள் 2023 டிசம்பர் 31 வரை செல்லுபடியாவதோடு, வாழ்வின் இன்றியமையாத விடயங்களுக்கு அத்தியாவசியமான அட்டையைப் பெற்றுக்கொள்ள அல்லது மேலதிக விபரங்களை அறிய ஆர்வமுள்ளவர்கள் செலான் வங்கியின் துரித இலக்கமான 011 200 88 88 ஐ அழைக்கலாம்.

# அகில இலங்கை சித்திரப் போட்டி




பார்வை தொடர்பான சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்கிடும் இலங்கையின் மிகப்பெரிய நிறுவனமான விஷன் கெயார் 2023 உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு 100க்கும் அதிகமான பணப்பரிசுகளை வெல்லக்கூடிய அகில இலங்கை ரீதியிலான ""எனது பார்வையில் நாளைய உலகம்"" எனும் தொனிப்பொருளில்சித்திரப் போட்டியொன்றினை "பாட்ட சித்தம்" எனும் பெயரில் ஒழுங்கு செய்துள்ளது. ஸ்ரீ பாலர் பிரிவு(தரம் 1 -3), இடைநிலைப்பிரிவு (தரம் 4 -6), சிறுவர் உயர் நிலை(தரம் 7 -9), சிரேஷ்ட உயர் நிலை(தரம் 10 -11), மேல் நிலைப் பிரிவு(தரம் 12 -13) ஆகிய ஐந்து வயதுகளின் பிரிவுகளில் நடைபெறவிருக்கிறது.

இறுதிச் சுற்றின் வெற்றியாளர்களுக்கு பணப் பரிசுகளும் சான்றிதழ்களும் மேலும் பல பெறுமதி மிக்க பரிசுகளும் காத்திருக்கின்றன. மேலும் ஒவ்வொரு வயதுப்பிரிவின் வெற்றியாளர்களுக்கும் பணப்பரிசுகள் காத்திருக்கின்றன.

.இச்சித்திரங்களை வோட்டர் கலர்ஸ், பஸ்ல், போஸ்டர் பெயின்ட், அக்ரலிக், ஒயில் பெயின்ட் அல்லது வேறு எந்த, விரும்பிய வர்ணப்பூச்சுகளைக் கொண்டும் நிறந்தீட்ட முடியும்.

சமர்ப்பிக்கப்பட வேண்டிய சித்திரங்கள் 18 ஓ 14 அங்குலங்களைக் கொண்ட அளவில் கிடையான அல்லது நேரான படங்களாக இருந்திட முடியும். கடதாசி, போர்ட், கன்வஸ் அல்லது ஏதேனுமொரு உகந்த மேற்பரப்பில் வரையப்பட்ட சித்திரங்களை இப்போட்டிக்கு சமர்ப்பிக்க முடியும்.

அனைத்து சித்திரங்களும் பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர் அல்லது பாட விதான ஆசிரியரால் உறுதி செய்யப்பட்டு 2023, செப்டம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் விஷன் கெயார் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இறுதிப் போட்டிகளுக்கான திகதி நேரம் மற்றும் நடைபெறவிருக்கும் இடம் போன்ற தகவல்கள் பின்பு அறியத்தரப்படும்.



# நைன்வெல்ஸ்

## மருத்துவமனையின் நூற்றாண்டு விழா

புகழ்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர் மருத்துவமனையான ஜோசப் ஃப்ரேசர் நைன்வெல்ஸ் மருத்துவமனை அதன் 100 ஆண்டுகால பாரம்பரியத்தை நினைவுகூரும் வகையில், அந்த மருத்துவமனையின் பெயருக்கு காரணமான ஜோசப் ஃப்ரேசரின் பேத்தியான பட்ரீசியா மொல்லாய் அவர்கள் மருத்துவமனைக்கு வருகை தந்து சிறப்பித்துள்ளார்.

2023 ஆகஸ்ட் 24 ஆம் திகதி, இந்த இதயத்தை வருடும் மறக்க முடியாத தருணத்தைக் குறிக்கும் வகையில் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றதுடன், இது இலங்கையில் மகளிர் மற்றும் சிறுவரின் சுகாதாரப் பராமரிப்புக்கான மருத்துவமனையின் அர்ப்பணிப்பை வலுப்படுத்தவும், அதன் ஸ்தாபக நோக்கத்திற்கு கௌரவம் செலுத்தவும் உதவியது.

மறைந்த தனது கணவர் ஜோசப் ஃப்ரேசரின் நினைவாக 1923 ஆம் ஆண்டில் கிறிஸ்ஸி ஃப்ரேசர் அவர்களால் இந்த மருத்துவமனை ஸ்தாபிக்கப்பட்ட நூற்றாண்டு விழாவையொட்டியதாக இந்த வருகையும், நிகழ்வும் இடம்பெற்றுள்ளன.

ஜோசப் ஃப்ரேசரின் 4வது, 5வது மற்றும் 6வது தலைமுறையின் வழித்தோன்றல்களை உள்ளடக்கிய அவரது குடும்பத்தினர் புடைசூழ, பட்ரீசியா மொல்லாயின் வருகை இந்நிகழ்வுக்கு குடும்ப உறவின் உணர்வைச் சேர்ப்பித்தது.

இந்நிகழ்வில், ஜோசப் ஃப்ரேசர் நைன்வெல்ஸ் மருத்துவமனையின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. தியோ பெர்னாண்டோ மற்றும் ஜோசப் பிரேசர் நினைவகத்தின் அறங்காவலரான திரு. தோமஸ் டேட்வைலர் ஆகியோர் கலந்து கொண்டு, மகளிரின் சுகாதாரப் பராமரிப்பில் ஃப்ரேசர் குடும்பத்தின் நீடித்த அர்ப்பணிப்பைப் பாராட்டி, பட்ரீசியா மொல்லாய்க்கு நினைவுச்சின்னத்தை வழங்கினர்.





# தீவா வெற்றியாளர்கள் கௌரவிப்பு

பெருமைக்குரிய இலங்கை வர்த்தக நாமமான தீவா (DIVA), Women in Management (WIM) உடன் இணைந்து முன்னெடுக்கும், பெண்கள் தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாடு குறித்த பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கிய "தீவா கரங்களுக்கு வலு" நிகழ்ச்சித் தொடரில், தங்கொட்டுவவில் இடம்பெற்ற நிகழ்வின் வெற்றியாளர்களுக்கு அண்மையில் விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்வருடம் தங்கொட்டுவ பிரதேசத்தில் இதன் முதலாவது வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது நாடு முழுவதையும் உள்ளடக்கிய தேசிய வேலைத்திட்டமாக இது இடம்பெற்று வருகின்றது.

நாட்டில் பொருளாதார நெருக்கடியின் அழுத்தத்தை அனைவரும் உணரும் இத்தருணத்தில், தொழில்முனைவோர், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களில் ஈடுபடுவோர், வீட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சக்தியாக மாறி, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பங்களிக்கும் குறிப்பிடும்படியான போக்கை தற்போது காணக் கூடியதாக உள்ளது.





# வளர்ச்சிப் பாதையில் அமானா

நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியிலும், அமானா வங்கி தொடர்ச்சியாக உயர்ந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. மீளாய்வுக்குட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 802.8 மில்லியனைப் பதிவு செய்திருந்தது.

முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி ரூ. 556.9 மில்லியனாக பதிவாகியிருந்ததுடன், நடப்பு ஆண்டில் இந்தப் பெறுமதி 44% உயர்ந்துள்ளது. சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலிலும், மீண்டெழுந்திறனுடனான செயற்பாடுகளின் காரணமாக, இரண்டாம் காலாண்டில் மாத்திரம் வங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிக்கு முந்திய இலாபமாக, 122% வளர்ச்சியை பதிவு செய்து, ரூ. 379.4 மில்லியனாக பதிவு செய்திருந்தது.


உயர் வரி அறவீடுகள் காணப்பட்ட போதிலும், முதல் அரையாண்டு காலப்பகுதியில் வங்கியின் வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 419.6 மில்லியனாக பதிவாகியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமதி 16% உயர்வாகும். இரண்டாம் காலாண்டில், வங்கியின் வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 111.3 மில்லியனிலிருந்து ரூ. 198.9 மில்லியனாக 79% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

2023 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் தனது உறுதியான இலாபகரச் செயற்பாட்டை வங்கி தொடர்ந்தும் பேணியிருந்தது. இக்காலப்பகுதியில் நிதிசார் வருமானம் ரூ. 4.85 பில்லியனிலிருந்து 80% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 8.75 பில்லியனாக உயர்வடைந்திருந்தது.

இதில், உரிய நேரத்தில் நிதிப் பிரயோகம் மற்றும் முற்பணங்கள் மற்றும் பொறுப்புகளின் மீள்-விலையிடல் போன்றவற்றை மேற்கொண்டிருந்தமை போன்றன பங்களிப்பு வழங்கியிருந்தன. இதன் பெறுபேறாக, வங்கியின் நிதியளிப்பு எல்லைப் பெறுமதி 3.6% இலிருந்து 4.8% ஆக உயர்ந்திருந்தது. முதல் அரையாண்டில் தேறிய நிதியளிப்பு வருமானம் ரூ. 3.36 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது 68% வருடாந்த அதிகரிப்பாகும்.

# நவலோக்க மருத்துவமனைக் குழுத்துக்கு அதிக இலாபம்



நவலோக்க மருத்துவமனை குழுமம் ஜுன் 30, 2023 இல் முடிவடைந்த முதல் காலாண்டில் 120 மில்லியன் ரூபாய் வரிக்கு முந்தைய இலாபத்தைப் பதிவு செய்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட இடைக்கால நிதி அறிக்கை இந்த நிதி செயல்திறன்களை அறிவித்தது மற்றும் நிறுவனத்தின் வரிக்கு முந்தைய இலாபம் முந்தைய நிதியாண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 158% அதிகரித்துள்ளது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் சமீபத்திய கட்டமைப்பு மாற்றங்கள், மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவைகள் மற்றும் சிறந்த நோயாளர் பராமரிப்பு சேவைகள் ஆகியவை இந்த நிதிச் செயல்திறனுக்குக் காரணம் என நிதி அறிக்கை கூறுகிறது.

நவலோக குழுமத்தின் புரள்வு 2.6 பில்லியன் ரூபாவாக அமைந்துள்ளதுடன், மேலும் இது முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 21% வளர்ச்சியைக் காட்டுகிறது. இதற்கு சமாந்தரமாக நவலோக்க குழுமத்தின் செயற்பாட்டு இலாபம் 580 மில்லியன் ரூபாவாகும்.இது கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட 200 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 185% வளர்ச்சியை எட்டியுள்ளது.

நவலோக்க மருத்துவமனை நிறுவனத்தின் பங்கு ஒன்றின் வருமானமும் சாதகமாக வளர்ச்சியடைந்து மற்றும் ஜுன் 30, 2023 இல் முடிவடைந்த முதல் காலாண்டில் 0.085 இல் காணப்பட்டது. இது முந்தைய ஆண்டில் 0.148 ஆக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நிறுவனத்தின் வரிக்கு முந்தைய இலாபம் 2,224% அதிகரித்து 94 மில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

# கிரிபத்கொடவில் HNB FINANCEஇன் கிளை

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC தனது புதிய கிளையை கிரிபத்கொடையில் திறந்து வைத்துள்ளது.

HNB FINANCE PLC இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமித்த பிரபாத் மற்றும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி மதுரங்க ஹீன்கெந்த ஆகியோரின் தலைமையில் இந்த புதிய கிளை திறக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் உட்பட பிரதம அதிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.



கிளையானது இல. 58, கண்டி வீதி, கிரிபத்கொடையில் அமைந்துள்ளது மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் லீசிங், கடன்கள், நிலையான வைப்புக்கள், வணிகக் கடன்கள், வீட்டுக் கடன்கள், சேமிப்புக் கணக்குகள் போன்ற பல நிதி வசதிகள் இதன் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.இக்கிளை சிட்டி சென்டரில் அமைந்துள்ளது.